RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1860

# உளவியல் நோக்கில் அம்பையின் 'தனிமையெனும் இருட்டு' இரண்டு உளச்சக்திகள்

ஜெ. வித்யா [அ], சி. வாசுகி [ஆ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல், தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி-624601, தமிழ்நாடு, இந்தியா.

# Terms of Psychology in Ambai's 'Thanimai Ennum Iruttu' the two Psychological Forces

J. Vidya [a], C. Vasuki [b, *]

[a] Department of Tamil, Mother Teresa Women's University, Kodaikanal-624101, Tamil Nadu, India

[b] Department of Tamil, Arulmigu Palaniandavar College of Arts and Culture, Palani-624601, Tamil Nadu, India

* Corresponding Author: cavasuki1965@gmail.com

Received: 12-08-2022
Revised: 20-10-2022
Accepted: 07-11-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

When a short story deals about the individual's personal life then it can be called a personal short story. In personal short stories, the singularity of individual nature is predominant. Thus, there are some short stories where individual nature and social relativism are not given priority but both have an equal place or a parallel place. The mental image in them is not single primacy but duality. Two psychic powers are manifested in them. The reason for such differences may be the difference in the creator's view of life. Some writers see human behaviour through socio-cultural dependence while others see social dependence and individual nature together in human behaviour. The soul of man is not only influenced by social culture but also by some independent characteristics of human life and it is operated accordingly. The depiction will be according to the experience, vision, ideology and time of the short story writer. It is natural for writers who are trying to see the holistic trends of life to engage in such a variety of depictions. In that way, this article explores the difference between two desires in human behaviour.

**Keywords:** Psychology, Terms, Ambai's, Short Stories

## முன்னுரை

தனிநபரின் தனிமனித இயல்பு சார்ந்த உளப்போக்குகள் முதன்மை பெற்று ஒரு சிறுகதை அமையப் பெற்றிருக்குமானால் அது தனிநபர் சிறுகதை எனப்படும். இதுவே சமூகப் பண்பாட்டுத்தளம் சார்பை முதன்மையாகக் கொண்டிருக்குமானால் அதனைச் சமூகச் சிறுகதை எனலாம். தனிநபர் சிறுகதைகளில் தனிநபர் இயல்பு என்ற ஒற்றைத் தன்மை முதன்மை பெற்றிருக்கும். இவ்வாறு தனிமனித இயல்பு, சமூகச் சார்பியல்பு என்று ஒற்றைப் போக்குகள் மட்டுமே முதன்மை பெறாமல் இரண்டு இயல்புகளும் சமமான இடத்தை அல்லது இணையான இடத்தைப் பெற்றிருக்கக் கூடிய சில சிறுகதைகள் உண்டு. அவற்றில் இடம் பெற்றிருக்கும் உளச்சித்திரிப்பு ஒற்றை முதன்மை கொள்ளாமல் இருமையின் இணைவு முதன்மை பெற்றிருக்கும். இரண்டு உளச் சக்திகள் அவற்றில் வெளிப்பட்டிருக்கும். இத்தகைய வேறுபாடுகளுக்குக் காரணம் படைப்பாளன் வாழ்க்கையைப் பற்றிய தனது பார்வையை வெளிப்படுத்தும் வேறுபாடு எனலாம். சமூகப் பண்பாட்டுச் சார்பு வழியிலான மனித

நடத்தையை சில படைப்பாளிகள் கண்டு வெளிப்படுத்த வேறு சிலர் சமூகச் சார்பையும் தனிமனித இயல்பையும் ஒருங்கே மனித நடத்தையில் காண்கின்றனர். மனிதனின் உள்ளம், சமூகப் பண்பாட்டுச் சார்பால் மட்டுமின்றி மனித உயிர் என்ற தன்னளவிலான சில இயல்புகளாலும் ஆக்கப் பெற்று அதற்கேற்ப இயங்கிச் செல்கிறது. சிறுகதை எழுதும் ஆசிரியரின் அனுபவம், பார்வை, கருத்தியல், காலம் ஆகியவற்றிற்கு ஏற்பவே சித்திரிப்பு அமையும். வாழ்வியலின் முழுமையான போக்குகளைக் காணும் முயற்சியில் ஈடுபடும் படைப்பாளிகள் இவ்வாறு பல்வேறு சித்திரிப்பு முறையில் ஈடுபடுவது இயல்பானதாகும். அந்த வகையில் மனித நடத்தையில் இரு வேட்கைகள் அல்லது இரு உளச்சக்திகள் உள்ளோடும் நிலைகள் சித்திரிக்கப் பெற்றிருக்கும் பாங்கு பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

## அருணாவின் உளவியல்

அருணா தனிமையை விரும்புபவள். இருட்டு வேளை தொடங்கும் போது விளக்கு ஏத்த விரும்பமாட்டாள். அந்த வெளிச்சம் அவள் தனிமையைப் பிரகடனப்படுத்தும் என்று ஒரு மனஉளைச்சல் அவளுக்கு எப்போதுமே இருட்டுப் பரவும் வேளையில் ஏற்படும். "அம்மா பாரேன் எனக்குச் சின்னப் பொண்ணா இருந்தப்போ கருப்பிலே வெள்ளிப் பூப்போட்ட பாவாடை வாங்கினியே, அதே மாதிரி அங்கே ஒரு பொண்ணு போட்டிண்டிருக்கா பாரு" என்ற கூற்று அருணா இருட்டை ஆழ்ந்து ரசிக்கின்றாள் என்பதைப் புலப்படுத்துகின்றது (Ambai, 2019).

இருட்டில் அவள் அமிழ்ந்து கிடக்கும் போது அவள் மனத்தில் அம்மா, அப்பா, அண்ணா, அவர்கள் வீட்டு நாய் லில்லி எல்லோருமே வேறு மாதிரி தென்படுவார்கள். படிக்காத அம்மாவை அவள் படித்தவள் போல் கற்பனை செய்து பார்ப்பாள். அப்பா சினிமாவில் வரும் அப்பாக்களைப் போன்று அவள் முதுகில் தட்டிக் கொடுத்து நீ இந்த வீட்டு விளக்கம்மா என்று கூறுவார். அண்ணா பாசமலர் சிவாஜிகணேசனாக மாறி அவளைப் பாசத்தோடு பார்ப்பாள். இருட்டு வேளையில் அந்தக் குடும்பமே அவளுக்கு ஓர் அழகான உலகமாகத் தெரியும். ஆனால் இருளை விட்டு அகன்ற பின்னர் வழக்கமான கண்டிப்பைக் காட்டும் அம்மா, அப்பா, அண்ணா ஆகியோர் தன்னுடன் இருப்பது நினைவுக்கு வரும். இவ்வாறு பலதடவைகள் அவள் மனத்தில் அவளே உண்டாக்கிக் கொள்ளும் தோற்றங்களுக்கும் நிஜமானவைகளுக்கும் உள்ள இடைவெளியை எண்ணிப் பயந்தே அவள் தனியாக உட்காரப் பயப்படுவாள்.

"அப்படியும் ஸ்வாமிக்குச் சந்தன அபிஷேகம் செய்யும் போது தலையிலிருந்து ஒழுகத் தொடங்கிப் பின் மளமளவென்று கீழே வந்து விடுவதைப் போல் வானத்துக்கு இருட்டாபிஷேகம் (அது அவளாக ஏற்படுத்திக் கொண்ட சொல்) நடக்கும் போது அந்தக் கொல்லை வாசற்படியும் காற்றில் அசையும் தென்னை இலைகளும் கண்களை உருட்டிக் கிரிச்சிடும் ஆந்தையும் அவளை வாவாவென்று கூப்பிடும். இருட்டில் பலபேர் அவளைச் சுற்றியுள்ளது போல் படும்" என்ற கூற்று இருள் வேளையில் அவள் இயல்பு உலகத்திற்குத் திரும்பினாலும் கனவு உலகம் அவளை முழுமையாக ஆக்கிரமிப்புச் செய்து கொள்கின்றதைப் புலப்படுத்துகின்றது (Ambai, 2019).

இதை பிராய்டு இரண்டு உளச் சக்திகள் என்று கூறுகின்றார். இந்த இரண்டு உளச் சக்திகளும் மாற்றி மாற்றி வந்து இவளைக் கொடுமைப்படுத்துகின்றன. இவ்வித இரண்டு உளச்சக்திகள் இவளை அறியாமல் இவளிடம் உருவாகி விட்டன. இதிலிருந்து இவள் மீண்டு வர வேண்டும் என எண்ணுகின்றாள். இதனை "ஏதோ ஒரு வகையில் எதிலிருந்தோ விடுபட்டது போலிருந்தது. அவள் தனிமை ஆசையும் நானாவிதத் தோற்றங்களோடு இருட்டு அவளை அழைப்பதும், அவள் விருப்பப்பட்ட ஒன்றாக இல்லாமல் மெல்ல மெல்ல அவளை அச்சுறுத்திய விலங்கிட்ட ஒரு பழக்கமாய் அவளுக்குத் தோன்றத் தொடங்கியிருந்த சமயம் அது." என்ற கருத்தால் நாம் உணரலாம் (Ambai, 2019).

அவளுக்குத் தனிமையில் இருப்பது இயல்பான பழக்கம் இல்லை என்றாலும் அவளது குடும்பச் சூழலும் புறச்சூழலும் இப்பழக்கம் அவளிடம் செயற்கையாக ஒட்டிக் கொள்ளக் காரணமாக அமைந்து விட்டன. கொஞ்சம் கொஞ்சமாக அவளும் அதற்கு அடிமையாகி விட்டாள். இதனை "ஜேப்படித் திருடனுக்கு வாய் பிளந்த பணப்பை ஒன்று துருத்திக் கொண்டு வெளியே தெரியும்போது, கை

அரிப்பெடுப்பது போல் நடைமுறையைப் புறக்கணித்துக் கனவில் மூழ்கிவிடும் உணர்வு அவளை ஆக்கிரமித்து விட்டதாக அவள் உணர்ந்தாள்" என்ற கூற்று இருட்டை விரும்பும் பழக்கம் அவளோடு செயற்கையாக ஒட்டிக் கொண்டதை மெய்ப்பிக்கின்றது (Ambai, 2019).

## அருணாவின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

அருணா மேற்கண்ட உளவியல் சிக்கலுக்கு ஆளாக இருந்த நாட்களில் ரங்கநாதனுக்கும் அருணாவுக்கும் திருமணம் நடந்தது. இருவரும் சேர்ந்து மூன்று மாதங்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். அதன் பின் அவன் மாதத்தில் இருபது நாட்கள் டூர் போயிடுவேன். நீ தனியாக இருப்பியா எனக் கேட்டான். இதைக் கேட்ட அவள் நானும் உங்களுடன் வரமுடியாதா எனக் கேட்டாள். தான் டூர் போகவில்லை என்பதையும் வேலைக்காகச் செல்வதையும் கூறினான். இவளால் தனிமையைச் சமாளித்துக் கொள்ள முடியும் என அவன் நம்பினான். ஆனால் வேற்று மொழி பேசும் அண்டை வீட்டாரிடம் அவளால் நெருங்கிப் பேச, பழக இயலவில்லை. "தன் மனத்தில் உள்ளதை எல்லாம் கூறி வெறும் துணையாக மட்டும் அல்லாமல் ஓர் ஆத்ம பலமாகவும் இருக்கக் கூடிய நட்பு ஏனோ அவளுக்கு ஏற்படவே இல்லை. சினிமா செல்லும் நட்பு, மார்க்கெட் செல்லும் நட்பு எல்லாம் அவள் மனதுக்கு உகந்ததாக இருக்கவில்லை". இக்கூற்று நட்புக் கிடைக்காத அவளது சிக்கலான சூழ்நிலையை வெளிப்படுத்துகின்றது (Ambai, 2019).

"முன் அறையைப் புதுமாதிரி அலங்காரம் செய்து விட்டுத் திரும்பும்போது அதை ரஸிக்க யாரும் இல்லை என்ற உணர்வு ஏற்படும். மணக்க மணக்க மோர்க்குழம்பு செய்து, அப்பளம் பொரிக்கும்போது தான் மட்டுமே அதைத் தனியாக அமர்ந்து சாப்பிட்டுவிட்டு மோர்க்குழம்பு பிரமாதம் என்று சில சமயம் வாய்விட்டுச் சொல்லிக் கொள்ளப் போகிறோம் என்ற அலுப்பு ஏற்பட்டது. பலமுறைகள் இப்படி மனம் சலித்துப் போனபோது அவர் இருந்தால் இப்போது என்ன செய்வார்? என்று அவளே கேட்டுக் கொண்டு அதை எண்ணி ரஸிக்கத் தொடங்கினாள்" (Ambai, 2019).

இத்தகைய தனிமைச் சிக்கலுக்கு ஆளான இவள் தான் வீட்டைப் பராமரிக்கும் பணிகளைப் பாராட்டவோ, தான் சமைக்கும் உணவை ருசித்துப் பார்த்துப் பாராட்டவோ ரங்கநாதன் தன் அருகில் இல்லை என்று எண்ணிக் கவலைப்படத் தொடங்கினாள். இந்நிலை அவளை மீண்டும் பழைய நிலைக்கே அழைத்துச் சென்றது. விளக்கைப் போடாமல் ஜன்னலருகே உட்காரத் தொடங்கினாள். வெளியே போவோர் வருவோரைப் பார்க்கத் தொடங்கினாள். தானும் ரங்கநாதனுமாக அவ்வாறு போய் வருவதாகக் கற்பனையில் வாழத் தொடங்கினாள்.

ரங்கநாதன் மீது கொண்ட காதல்தான் அருணாவை இத்தகைய சிக்கலுக்கு ஆளாக்கியுள்ளது என்றும் கருத இடமுண்டு. "மெய்யாக நோக்கின் காதல் என்பதனுள் உடற்கலப்பும் அடங்கும். உடற்கலவியின்றிக் காதற்றன்மை செம்மையுறாது. பாலுறவுதான் காதல் என்னும் தகுதிக்கு உரியது. காதல் என்பது பெயர் மேலிட்டுப் பிறவாறு சொல்லுவது எல்லாம் அறைகுறையான உருவமாவன" (Muthuveerappan, 1995).

ரங்கநாதன் தன்னுடன் இருந்து தான் செய்வதை ரஸித்துத் தன்னுடன் இருந்து காதல் செய்து அன்பு காட்டாததால் மனச் சிக்கலுக்கு ஆளாகின்றாள். நேரில் வராமல் வார்த்தையால், கடிதத்தால் காட்டும் அன்பு, எப்பொழுதோ ஒருமுறை வந்து போவது என்பவற்றை அறைகுறையான அன்பாக நினைத்தாள். இந்த நினைப்பே அவளைத் தனிமையைத் தேடச் செய்தது. "ஆணும் பெண்ணும் சம உரிமை, உள்ளத்தாலும் உடலாலும் முழுநெருக்கம், நிலையான மதிப்பீடுகளில் ஒன்றுபட்ட உணர்வு போன்ற பல நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் திருமணம் என்ற அமைப்பில் மகிழ்ச்சியாக வாழ முடியும்", இந்த வாய்ப்பு அருணாவுக்கு அமையவில்லை (Bertrand Russel, 1976).

புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினால், மனத்தில் நிழற்படம் போல் ரங்கநாதன் உருவம் பல கோணங்களில் தோன்றியது. ஷேவிங்சோப்பை முகத்தில் அப்பிக் கொண்ட ரங்கநாதன், சாப்பிட்டபின் தலையை நன்றாகச் சாய்த்துத் தண்ணீர் குடிக்கும் ரங்கநாதன், சமையலறைக் குழாயைத்

திறந்து கைகழுவிக் கொள்ளும் ரங்கநாதன், ஒருக்களித்துப் படுத்தவாறே புத்தகம் படிக்கும் ரங்கநாதன், அண்ணாந்து பார்க்கும் ரங்கநாதன், வாய்விட்டுச் சிரிக்கும் ரங்கநாதன், சோபாவில் சாய்ந்தவாறு சிகரெட் பிடிக்கும் ரங்கநாதன் எனத் தொடர்ந்து ரங்கநாதன் நினைவுகள் வந்து கொண்டே இருந்தன. காலியாகக் கிடந்த சோபா, சாம்பல் தூள் நிரம்பாத சாம்பல் தாங்கி, இவையாவும் அமைதியின் வடிவமாய் இருந்து அவளைத் தாக்கின.

இரவு சாப்பிடத் தட்டில் உணவைப் போட்டபோது உடன் ரங்கநாதன் இருந்தால் நன்றாக இருக்குமே என எண்ணினாள். சாப்பிடும் பொழுது அவர்களுக்கு இடையே நடந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்த்தாள். ஆனால் அவள் மனத்தில் ஓடிய கற்பனை நிகழ்வுகள் ஏதோ இனம் புரியாத விதத்தில் அவளுக்கு இதமாக இருந்தன. அவள் தான் தனியாகச் சாப்பிடவில்லை உடன் அவன் இருப்பதாகவே எண்ணினாள்.

ஒருநாள் அவள் தனது நாட்குறிப்பு ஏட்டை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதில் அவளுக்கும் ரங்கநாதனுக்கும் இடையில் நடந்த அத்தனை நிகழ்வுகளையும் பதிந்து வைத்திருந்தாள். அதைப் பார்த்த உடனேயே அவளுக்கு அவனுடன் இருப்பது போன்ற நினைவு தோன்றியது. “இந்தக் கணத்தில்இனிமையைப் பங்குபோட்டுக்க முடியாமல் எங்கேயோ இருக்கேளே? இது திரும்ப வருமா? உம்? இதைக் கேட்ட மறுவினாடியே குளிர்காலத்தில் கம்பளிப் போர்வையில் புகுந்து கொண்டு அந்த வெப்பத்தை அனுபவிப்பது போல் அவளும் அவள் எண்ண ஓட்டங்களுமாய் அந்த இருட்டில் மெதுவாக ஒலிக்கும் வீணை இசையின் நடுவே அந்த சிந்தனை வடித்த பிம்பங்களை மேலே போர்த்திக் கொண்டு இருக்கும் போது அங்கே ரத்தமும் தசையும் உருவமும் உள்ள ரங்கநாதனுக்கே இடமில்லை போல் அவளுக்குப் பட்டது.” இவ்வாறு எண்ணிக் கொண்டு உறங்கிப் போனாள். இவ்வாறு இருப்பதே அவளுக்குச் சுகமாக இருந்தது (Ambai, 2019).

அவன் தன்னுடன் இருந்து உறவாடுவது போலவே அவள் நினைத்துக் கொண்டாள். அவனது சாம்பல் தாங்கியில் சாம்பல் இருப்பதாக எண்ணி அதைச் சுத்தம் செய்து வைத்தாள். இந்நிலைக்கு அவள் செல்லத் தொடங்கியதிலிருந்து வேலைக்காரியை வேண்டாம் என நிறுத்தி விட்டாள். ரங்கநாதனுடன் படத்துக்குப் போவதாக எண்ணிக் கொண்டு தானே தனியாகப் படத்துக்குப் புறப்பட்டுச் சென்றாள். டிக்கெட் எடுத்துக் கொண்டு போய் சீட்டில் அமர்ந்தாள். அங்கு கண்ட ஒவ்வொரு காட்சியையும் அருகிலிருந்து ரங்கநாதன் காண்பதாக நினைத்துக் கொண்டாள். ஒவ்வொரு சிரிப்புக் காட்சிக்கும் அவன் வயிறு வலிக்கச் சிரித்து மகிழ்வதாக எண்ணிக் கொண்டாள். தியேட்டரை விட்டு வெளியே வரும் போது மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. இதைக் கண்டு கொள்ளாமல் தன்னைச் சுற்றிப் பெரிய வட்டம் ஒன்றை வரைந்து கொண்டு ரங்கநாதனுடன் மனத்தளவில் இனிமையாக வாழ்ந்து வந்தாள். இந்த இரட்டைச் சிந்தனை அருணாவை ஆபத்தான உளவியல் சிக்கலுக்கு ஆளாக்கியது.

ஆடவர் முதன்மைச் சமூகத்தின் அநீதிகளில் மற்றொன்று மகளிர் தலையில் சூட்டப்படும் பொறுப்பு முள்முடி. தற்காத்துத் தற்கொண்டானைப் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்வும் இல்லாமல் செயற்படுபவளே பெண்" என்ற கூற்று பெண் பொறுப்பானவளாகச் செயல்பட வேண்டும் என்ற இச்சமுதாயத்தின் எதிர்பார்ப்பாகும் (Meenashi Murugarathinam, 1999). ஆனால் அருணா போன்ற பெண்கள் இதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. தன் கணவனின் அருகாமையான அன்பு தனக்குக் கிடைக்காதபோது இவர்கள் யாரையும் நம்பத் தயாராயில்லை சமுதாய மதிப்பீட்டையும் விரும்புவதில்லை.

"தன்னையோ, தன் ஆன்மாவையோ கசடற உணர முடியாதவர்களுக்கு ஊரையோ, உலகையோ உணர்ந்து கொள்ள முடியாது என்பது வெளிப்படை" இக்கூற்றுக்கு ஏற்ப தன்னை உணராதவள், தன் ஆன்மாவைக் கசடற உணரமுடியாதவள் (Somasundaram, 2002).

தமிழ் இதழ்களில் பெண் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளாள் என்பது குறித்து ஆராய்ந்த பிரேமா அவர்கள் "பெண்களை அடிமைகளாக, போகப் பொருளாக, கவர்ச்சிப் பொருளாக, இல்லத்திற்கு மட்டும் உரியவளாக, ஆணின் அடிமையாக, கணவனுக்குச் சகலமுமாக, அதிகாரத்தின் வசப்பட்டவளாக,

அநியாயத்தை எதிர்க்கத் துணிவில்லாதவளாக, அடங்கிப் போகுபவளாக, சிந்தித்துச் செயல்பட இயலாதவளாகக் கட்டமைக்கின்றன" என்கிறார் (Prema, 1998).

அருணா, பிரேமா கூறியுள்ள குடும்பத் தளத்தில் பயணித்தவளாக உள்ளாள். தன் கணவன் பணிநிமித்தமாக வெளியூரில் உள்ளான். இதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு தன் இல்லறவாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்க முயலவில்லை. சிந்தித்துச் செயல்பட இயலாதவளாக உள்ளாள்.

## அருணாவிடம் ரங்காதனின் கடிதம் ஏற்படுத்திய தாக்கம்

ரங்கநாதன் தன் அருகில் இல்லாவிட்டாலும் அவன் இருப்பது போன்றே எண்ணி இன்பமாக வாழத் தொடங்கினாள். இயல்புநிலை, கற்பனை நிலை என்ற இரண்டு நிலைகளில் அருணாவின் மனம் இயங்கத் தொடங்கியது. "இந்த இருமைப்போக்கு என்பது நாவல்களில் காணப்படும், சந்தித்துக் கொள்ளும், வாழ்வியக்கமாக இணைந்து இயங்கும் பல்வேறு மாந்தர்களின் உள்ளத்தில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகும். இவற்றின் இருமுகப் போக்குகளை ஒட்டுமொத்த வாழ்வின் இயங்கு கூறுகளாக படைப்பாளர்கள் காட்டியுள்ளனர்." என்பதற்கேற்ப அம்பை அருணாவைப் படைத்துள்ளார் (Ambai, 2019). இத்தகைய மனச்சிதைவுக்கு ஆளான அருணாவிற்கு ரத்தமும் சதையுமாக வாழும் ரங்கநாதன் விடுத்த கடிதம் பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ரங்கநாதனுக்கு அதிகமாகக் கடிதம் எழுதும் பழக்கம் இல்லை. ஆனால் அருணா ஒவ்வொரு விசயத்துக்கும் விரிவாகக் கடிதம் எழுதும் பழக்கம் உடையவள். தான் படித்த, ரசித்த, சமைத்த என அத்தனை நிகழ்வுகள் குறித்தும் ரங்கநாதனுக்குக் கடிதம் எழுதுவாள். அவளுக்கு ரங்கநாதன் இப்பொழுது எழுதி விடுத்திருந்த கடிதம் வியப்பைத் தந்தது.

"அன்புள்ள அருண்,

இந்த முறை நீ ஏன் ஒரு கடிதம் கூடப் போடவில்லை? உடம்பு சரியில்லையா? இங்கு எனக்கு ஒரே வேலை. வேலை நேரத்தையெல்லாம் பணமாக்கிக் கொண்டிருக்கிறேன். நான் ஞாயிற்றுக் கிழமை காலை வருகிறேன் (Ambai, 2019).

"உன்

ரங்கு"

"இந்தக் கடிதத்தைப் படித்த அருணா மகிழ்ச்சியடையவில்லை. அவளை மீறிக் கொண்டு உற்சாகம் தோன்றவில்லை. விளக்குகள் அனைத்தையும் அணைத்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள். நாட்குறிப்புப் புத்தகம், ஜன்னல் வழியாக வெளியில் தெரிந்த அனைத்தும் இவளுடன் வந்து ஒட்டிக் கொண்டன. மனத்தினுள் ஒரு ரங்கு உட்கார்ந்து கொண்டு இவற்றை ரசித்துக் கொண்டிருந்தான். கடிதம் எழுதிய ரங்கநாதன் வேறு யாரோபோல் தோன்றினான். அவளாகவே ஜோடித்த ஓர் அழகிய உலகினுள் புகும் வெளியாளாய் அந்தக் கடித ரங்கநாதன் தோன்றினான். அவள் மனத்தில் தோன்றிய சம்பாசனைகள், ஊடல்கள் எல்லாம் அவள் சொத்துப் போலவும் அவன் அதைப் பறிக்க வருபவன் போலவும் அவளுக்குப் பட்டது" (Ambai, 2019).

அந்த இதமான இருட்டில் தலையணையை அணைத்துக் கொண்டு தனியாகத் தன் மனத்தின் கற்பனைகளோடு நிதம் உறங்கி வாழும் வாழ்வை மாற்றிக் கொள்ள இயலாத ஒரு பலவீனம் அவளைத் தொற்றிக் கொண்டது. அவனது வருகயை ஏற்றுக் கொள்ள இயலாத மனம் தூக்க மாத்திரைகளைத் தேடியது. அதை எடுத்துக் கொண்டாள். அவனுக்குப் பிடித்த இளம்பச்சை நிறப் புடவையை அணிந்து கொண்டாள். ரங்கு நீயும், நானும் சேர்ந்தே இருக்கலாம் எனக் கூறிக் கொண்டு விளக்கை அணைத்தாள். படுக்கையில் படுத்துக் கொண்டாள். கற்பனை ரங்கநாதன் அவளுடன் ஒட்டிக் கொண்டான். நிஜ ரங்கநாதன் அவளை விட்டு விலகிச் சென்று விட்டான். தனது அருமையான உலகத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வெறித்தனத்துடன் ஒவ்வொரு மாத்திரிரையாக எடுத்துச் சாப்பிட்டாள். அவளும் ரங்குவும் கற்பனை உலகில் இறக்கை கட்டிப் பறந்தனர். நட்சத்திரங்கள் திடீரென அருகே வந்தது போல்

தோன்றிய போது அவளது கைகள் தலையணையை இறுகத் தழுவிக் கொண்டன. இவ்வாறு அவள் நிரந்தரமாகத் தூங்கிப் போனாள்.

பெண்கள் என்போர் பிராமன, சத்திரிய, வைசியர்கள் மற்றும் சூத்திர குலத்து ஆண்களையே சார்ந்தும் அவர்களுக்குத் தொண்டூழியம் செய்யப் பிறந்தவர்களே என்பதனை மனுதர்ம சாஸ்திரம் பின்வருமாறு குறிப்பிடுகிறது. "எந்தப் பருவத்தினளாயினும் தனது இல்லத்திலேகூட எந்தப் பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் இயற்றலாகாது" "இளமையில் தகப்பன், பருவத்திலே கணவன், விதவையான பின் மக்கள், இவர்கள் காவலின்றிப் பெண்கள் தன்னிச்சையாக இயங்கலாகாது" "தகப்பன், கணவன், மக்கள், இவர்களைத் தவிர்த்துத் தனித்திருக்க விரும்புதல் கூடாது. அப்படித் தனித்திருப்பின் பிறந்தகம், புக்ககமாகிய இரு குலங்களுக்கும் நிந்தை உண்டாக்குவாள்" என்ற மனுசாஸ்திரக் கருத்துக்கள் பெண்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கக் கூடியவை ஆகும். இதனை இயல்பாகவே அறிந்து பழக்கப்பட்டுப் போன அருணா தன் பிறந்த வீட்டுச் சூழலையும் புகுந்த வீட்டுச் சூழலையும் எண்ணுகின்றாள். கணவன் இல்லாத உலகத்தில் கட்டுப்பாடின்றி அவனுடன் வாழ்ந்து பழகிவிட்டாள். அவன் வந்தால் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை இச்சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை ஏற்கும் மனநிலையிலும் இல்லை. ஒருவிதமான குழப்ப நிலையில் வாழ்ந்து வருகின்றாள் (Subrmaniyan, 1983).

கணவன் வருவதாகக் கூறிய கடிதம் கண்ட அவள் குழப்பம் காரணமாகக் கற்பனை உலகிலிருந்து வெளிவரத் தயாராகவில்லை. தன் மனம் போன போக்கில் முடிவெடுக்கின்றாள். இவளது சமுதாயத்திற்கு உகந்ததா எனச் சிந்திக்கும் நிலையில் கதையின் முடிவு உள்ளது. சிறுகதைகளின் உள்ளடக்கம் பற்றிப் பேசும் "எண்பத்தொன்றில் தமிழ்" என்னும் நூல் இக்கதையின் முடிவுகள் குறித்துப் பேசுவது போல் பின்வருமாறு கருத்துக் கூறுகிறது. "சிறுகதைக்கு உள்ளடக்கமாகக் கருப்பொருளாக எதுவும் அமையலாம். தனிமனித குடும்ப, சமுதாய நிலைகளில் உள்ள பிரச்சனைகள் கதைக்குப் பொருளாக அமையலாம். இவற்றைப் படைக்கும் எழுத்தாளர் பொருளாதார, அரசியல், சமூக, சமயப் பின்னணியில் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுகிறார்? எவ்வாறு அதற்குத் தீர்வு காட்டுகிறார்? அணுகும் முறை, தீர்வு காட்டும் முறை, படைக்கும் முறை ஆகியன நடப்பியல் வாழ்க்கை நெறிகளுக்கு இயைந்து வருகிறதா? கதைமாந்தர் மன அறத்திறம் வாழ்க்கைப் போக்கிற்கும் ஊனம் ஏற்படாவண்ணம் அவை காட்டப்படுகின்றனவா? வாழ்க்கை நோக்கு சிறப்பான முறையில் பழைய மரபுகளுக்கு இயைந்த போக்கில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காட்டப்படுகிறதா? மரபுகள் மீறப்பட்டுப் புதுநெறி படைக்கப்படுகிறதா?" என்ற பல்வேறு வினாக்களுக்கு "தனிமையெனும் இருட்டு" என்னும் அம்பையின் சிறுகதை இடம் கொடுக்கின்றது. இயல்பு வாழ்க்கை, கற்பனை வாழ்க்கை இரண்டுக்கும் இடையில் உள்ள மனக்குழப்பமே அருணாவின் தவறான முடிவுக்குக் காரணமாகும் (Subrmaniyan, 1983).

கதையின் முடிவில் அருணா தன்னை மாய்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அவள் இச்சமுதாயத்தில் வாழ்ந்து காட்டியிருக்க வேண்டும். "கதைக்கு ஆழமான கருப்பொருளைத் தேர்ந்தெடுத்தல், சிறுகதை வழியே சமூக உணர்வைப் புலப்படுத்தல், கூரிய வாழ்க்கை நோக்கை புலப்படுத்தல், பாத்திரப்படைப்பை நன்கு ஆளுதல்", என்ற கூற்றுக்கு ஏற்பப் படைப்பாசிரியர் கதையை அமைத்து, இச்சமுதாயத்திற்கு ஆக்கப்பூர்வமான முடிவைத் தந்திருக்க வேண்டும் (Subrmaniyan, 1983).

## முடிவுரை

குடும்பத்தில் உள்ள பிற நபர்களுடன் மனம் விட்டுப் பேசி மகிழ்ந்து வாழும் பழக்கம் இல்லாதவள் அருணா. அவளது வீட்டில் தனியாக அமர்ந்து இருட்டை ரசிக்கும் பழக்கம் அவளுக்கு இயல்பாகிப் போனது. கற்பனையையும் நடப்பையும் ஒருசேரக் கண்டு வந்தது அவளது மனம். இதே பழக்கம் அவளது திருமண வாழ்விலும் ஒட்டிக் கொண்டது. ரங்கநாதன் மாதத்தில் இருபது நாட்கள் ஊருக்குப் போகாமல் தன்னுடன் எல்லா நாட்களிலும் உடன் இருக்க வேண்டும் என எண்ணினாள். இவ்வாசை நிறைவேறாமல் போனதால் கற்பனை ரங்கநாதனை மனத்துள் வடிவமைத்துக் கொண்டு எவ்வித இடையூறும் இல்லாமல் வாழத் தொடங்கினாள். நடப்பும் கற்பனையுமாகிய இரண்டு உளச் சக்திகளை ஒருசேர ஏற்றுக் கொள்ளாத அவள் மனம் இறுதியில் ஆழ்ந்த உரக்கத்தை நாடிச் சென்று விட்டது. இத்தகைய மனநிலையை மனச் சிதைவு என்று உளவியல் கூறுகிறது.

## References

Ambai, (2019) Ambai Kadhaikal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Bertrand Russell, (1976) Marriage and morals, London, Unwin Paper Backs, George Allen and Unwin Ltd, Australia.

Meenashi Murugarathinam, (1999) Penniya Sindhanaikal, Penniya Manineya nool veeliyettu kazhagam, Madurai, India.

Muthuveerappan, P. (1995) T. Janakiraman sirukadhaikal oru thiranaaivu, Annamalai University, Chennai, India.

Prema, R. (1998) Penniya Anugumuraikal, Tamil Puthagalayam, Chennai, India.

Somasundaram, A. (2002) Neelapandhanin Eazhuthu ulaga viluthukal, Kalaignan Pathippagam, Chennai, India.

Subrmaniyan, S.V., Kadikaasalam, N. (1983) Enpathumunril Tamil International Institutr of Tamil Stuides, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License